# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C.No.250/2015 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W.1 |
| Name | :ஆனந்தன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.07.2023

-----

(எதிரிகள் 1, மற்றும் 3 முதல் 6 வரை ஆஜர். எதிரி 2 ஆஜர் இல்லை. இரண்டாம் எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு - 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை:**

நான் கல்கொண்டான்பட்டி காலனியின் குடியிருக்கிறேன். விவசாய தொழில் செய்கிறேன். ஆஜர் எதிரிகளை நன்றாக தெரியும். கடந்த 14.04.2014 அன்று 4.30 மணிக்கு நான் குடியிருக்கும் காலனிக்கு அருகில் உள்ள இடத்தில் மொக்கைத்தேவர் மகன் மாயி வசத்திலிருந்து 22 செண்ட் இடத்தை கிரையமாக வாங்கினேன். மேற்படி மாயிக்கு அருகில் இடம் உள்ளது. நான் வாங்கியுள்ள இடத்தில் காலனியில் உள்ள மக்களுக்கு பாத்தியப்பட்டது என்று கூறி அவர்களை ஏவி விட்டு

பொய்யாக PCR வழக்கு பதிவு செய்யப்பட்டு அந்த வழக்கு விடுதலை ஆகிவிட்டது. இதனால் எனக்கும் ஒச்சாத்தேவருக்கும் பிரச்சனை இருந்தது. சம்பவ நாளன்று அருகில் நான், என் தம்பி ஸ்டீபன், என் மகன் பிரசாத் , ஆசீர்வாதம் ஆகியோர்கள் அருகில் உள்ள கிணற்றில் குளிப்பதற்காக மூக்கன் தோட்டத்திற்கு அருகில் குளிக்க நின்றுகொண்டிருந்த போது ஒச்சாத்தேவர், அவரது மகன்கள், சரவணன், பிரபு, அவரது அண்ணன் நல்லதம்பி, அவரது அண்ணன் மனைவி ஒச்சம்மாள், ஒச்சாத்தேவர் மனைவி பாப்பு ஆகிய 6 பேரும் கையில் ஆயுதங்களுடன் ஆக்ரோசமாக வந்தார்கள். ஒச்சாத்தேவர் மகன் சரவணன் மகன் கையில் அருவாள் வைத்திருந்தார். ஒச்சாத்தேவர் கையில் கம்வி வைத்திருந்தார். பிரபு கையில் அருவாள் வைத்திருந்தார். ஒச்சம்மாள், பாப்பு ஆகியோர்கள் கையில் கம்பு வைத்திருந்தார்கள். நாங்கள் வாங்க வேண்டிய நிலத்தை நீ வாங்கி நிம்மதியாய் அனுபவித்து விடுவாயா என்று ஆக்ரோசமாக சத்தமிட்டு சரவணன் கையில் அருவாள் வைத்து கெட்ட வார்த்தைகளால் பேசி ஆக்ரோசமாக இத்தோடு செத்து தொலைந்து போடா என்று சொல்லி அருவாளை வைத்து இடது காலில் வெட்டி இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார் இதனால் எலும்பு முறிவு ஏற்பட்டது. அந்த நேரத்தில் என் தம்பி ஸ்டீபன் ஓடி வந்து ஏண்டா என் அண்ணனை அடிக்கிறீர் என்று விலக்க வந்தார். அப்போது பிரபு என்பவர் கையில் இருந்த அருவாளை வைத்து எனது தம்பியை இடது கை மணிக்கட்டிற்கு மேலே வெட்டி

எலும்பு முறிவு காயத்தை ஏற்படுத்தினார். ஒச்சாத்தேவரின் அண்ணன் நல்லதம்பி என் தம்பி ஸ்டீபனை தலையில் இரும்பு கம்பியால் அடித்து இதோடு செத்து தொலைந்து போங்கடா என்று இரத்த காயத்தை ஏற்படுத்தினார். அந்த நேரம் எனது மகன் ஆசீர்வாதம் ஓடி வந்தார். சரவணன் கையில் இருந்த அருவாளால் இடது கையில் வெட்டி இரத்தக்காயத்தை ஏற்படுத்து பின்பு எலும்பு முறிவு ஏற்பட்டது. அந்த நேரம் என் மகன் பிரசாத்தும் ஓடி வந்தார். அந்த நேரம் சரவணன் கையில் இருக்கும் அருவாளால் தலையில் வெட்டி இரத்தக் காயத்தை ஏற்படுத்தினார். ஒச்சாத்தேவர் கையில் வைத்திருந்த இரும்பு கம்பியால் பிரசாத்தை கையில் அடித்து இதோடு செத்து தொலைந்து போங்கடா என்று கூறி அடித்ததால் எலும்பு முறிவு ஏற்பட்டது. பாப்பு மற்றும் ஒச்சம்மாளும் கையில் இருந்த கம்பால் என் மகன் பிரசாத்தை மாறி மாறி உடம்பில் அடித்தார்கள் இதனால் வீக்க காயம் ஏற்பட்டது. அந்த நேரம் கலவர சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தில் இருந்தவர்களான கல்யாணி மகன் மாயி, மொக்கையன் மனைவி இராணியம்மாள் ஓடி வந்தார்கள். மற்றும் நிறைய நபர்கள் ஓடி வந்தார்கள். என்னை பார்க்கவும் கையில் இருந்த ஆயுதங்களை போட்டு விட்டு ஓடி விட்டார்கள். பின்பு பக்கத்தில் இருந்தவர்கள் எங்களுக்கு தண்ணீர் கொடுத்தனர். பின்பு அந்த வழியாக வந்த காரில் உத்தப்பநாயக்கனூர் காவல் நிலையத்திற்கு

கொண்டு சென்றார்கள். அங்கு இருந்த காவல் துறையை சேர்ந்தவர்கள் மெடிக்கல் மெமோ கொடுத்து மருத்துவமனைக்கு செல்லுமாறு அறிவுறுத்தினார்கள். பின்பு உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் அட்மிட் செய்யப்பட்டோம். பின்பு அங்கிருந்த சிறிது நேரம் கழித்து மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துவிட்டார்கள். அங்கு 99வது வார்டில் நாங்கள் அட்மிட் செய்யப்பட்டோம். அங்கு வைத்து உத்தப்பநாயக்கனூர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் வந்து என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார் காட்டப்படும் **புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான் அது அ.சா.ஆ.1.** மேற்படி புகார் வாக்குமூலத்தில் வெள்ளைமலைப்பட்டியைச் சேர்ந்த எபினேசர் என்பவர் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்தார். மேற்படி அரசு மருத்துவமனையில் 23 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். என்னை தாக்க பயன்படுத்திய அருவாள் மற்றும் கம்பியை பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியும். காட்டப்படும் அருவாள் எதிரி சரவணன் இடது காலில் வெட்டியது. அது சா.பொ.1. காட்டப்படும் கம்பி ஓச்சாத்தேவர் தலையிலும் மற்றும் வலது தோள்பட்டை, வயிற்கு பகுதியில் அடித்து காயப்படுத்தியதாகும். அது சா.பொ.2. இது சம்மந்தமாக என்னை

உத்தப்பநாயக்கனூர் ஆய்வாளர் மருத்துவமனையில் வைத்து 2வது நாள் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை: இல்லை.**

/sd/Thiru.P.S.ரஸ்கின் ராஜ், 14.07.2023
சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

/உண்மை நகல்/

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.